## பாடம் - 8. உறவுமுறைக் கடிதம்

**பாடம்: தமிழ்**

**வகுப்பு: 4**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. நற்பண்பு - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

   அ) நல்ல + பண்பு ஆ) நற் + பண்பு இ) நல் + பண்பு **ஈ) நன்மை + பண்பு**

2. பின்வருவனவற்றுள் எது உள்ளரங்க விளையாட்டு இல்லை? _________.

   அ) தாயம் ஆ) ஐந்தாங்கல் இ) பல்லாங் குழி **ஈ) கபடி**

பாரம்பரியம் - இச்சொல்லுக்குரிய பொருளைத் தராத சொல் _________.

**அ) அண்மைக்காலம்** ஆ) தொன்றுதொட்டு இ) தலை முறை ஈ) பரம்பரை

### ஆ. வினாக்களுக்கு விடையளி

**1. தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள் எவை ?**

பாண்டி ஆட்டம், கபடி, தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி ஆகியவை தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள் ஆகும்.

**2. உள்ளரங்க விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.**

தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி ஆகியவை உள்ளரங்கு விளையாட்டுகளாகும்.

**3. கடிதத்தில் இடம்பெற்றுள்ள பழமொழியின் பொருள் யாது?**

**கரும்பு தின்னக் கூலியா?**

நாம் விரும்பியதைச் செய்வதற்கு நமக்கு யாரும் கூலி கொடுக்க வேண்டியதில்லை. நாமாகவே அச்செயலை சிறப்பாக செய்வோம்.

## மொழியோடு விளையாடு

### அ. உங்களுக்குப் பிடித்த விளையாட்டுகளைக் கட்டத்தில் கண்டறிந்து எழுதுக

1. கிளித்தட்டு
2. பம்பரம்
3. பல்லாங்குழி
4. சடுகுடு
5. அம்மானை
6. தாயம்
7. ஆடுபுலி
8. கோலி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கி | ளி | த் | த | ட் | டு | கா |
| ப | ம் | ப | ர | ம் | கு | யா |
| ல் | அ | ம் | மா | னை | டு | ப |
| லா | தா | ய | ம் | ம | ச | ழ |
| ங் | ஆ | டு | பு | லி | கோ | மா |
| கு | ஐ | ந் | தா | ங் | க | ல் |
| ழி | கி | ட் | டி | ப் | பு | ள் |

9. ஐந்தாங்கல்
10. கிட்டிபுள்

**ஆ. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க**

விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம்பெறுவன. சங்க காலத்தில் இளையரும் முதியவரும் பலவகையான விளையாட்டுகளிலும் பொழுதுபோக்குகளிலும் ஈடுபட்டனர். அவற்றுள் ஒன்று, ஏறுதழுவுதல். முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள், கூரிய கொம்புகளை உடைய காளைகளை அடக்குவதனை வீர விளையாட்டாகக் கருதினர்.

1. **ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடப்படுவன யாவை?**

விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடப்படுவனவாகும்

2. **ஏறுதழுவுதல் என்றால் என்ன?**

காளைகளை அடக்கும் வீர விளையாட்டு ஏறுதழுவுதல் எனப்படும்.

3. **உரைப்பகுதியில் இடம்பெற்றுள் எதிர்ச்சொற்களை எழுதுக.**

இளையவர் × முதியவர்

4. **ஏறுதழுவுதல் எந்த நிலத்துடன் தொடர்புடையது?**

ஏறு தழுவுதல் முல்லை நிலத்துடன் தொடர்புடையது.

5. நிரப்புக. ஏறு தழுவுதல் என்பது, வெளியரங்க விளையாட்டு. ( உள்ளரங்க / வெளியரங்க )

KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER